# காரைநகர் ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்

## நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

ஊர் ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வியூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கிராமங்களின் பெறுமதியான பண்பாட்டு கூறுகளை வெளிப்படுத்தல் மற்றும் வளங்களை நீண்ட காலம் பயன்படக் கூடிய வகையில் பாதுகாத்துப் பகிர்வதற்கான ஆவணப்படுத்தல் முறைகளையும் நாம் உருவாக்கி கிழக்கிலும் வடக்கிலும் சில ஊர்களை தேர்தெடுத்து முன்மாதிரிச் செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் பண்பாடு மற்றும், பாரம்பரியம் என்பவற்றை கட்டிக்காப்பதில் முக்கிய பங்குவகிக்கும் பல ஊர்களின் வரிசையில் ஒன்றாக திகழும் இனுவில் ஊரின் சிறப்பம்சங்களை ஆவணப்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாக காணப்படுகின்றது.

## இலக்குகளும் நோக்கங்களும்

காரைநகர் ஊர் சுவடிப்படுத்தல் திட்டமானது பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களைக் கொண்டுள்ளது

.

ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் சுவடிப்படுத்தல் **(documentation)**, சுவடிப்படுத்தல் **(archiving)**, அணுக்கப்படுத்தல் **(providing open access)**

1. வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி காரைநகர் ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல்
2. காரைநகரின் வரலாற்றை தேடி அதனை சுவடிப்படுத்தி மக்களுக்கு வழங்கல்
3. காரைநகர் தொடர்பான வரலாற்று மற்றும் சமூக ஆய்வுகளுக்கான பாதை ஏற்படுத்தி கொடுத்தல்.
4. காரைநகரில் உள்ள ஆளுமைகள் மற்றும் பிரபலங்களின் வாய்மொழி வரலாறுகளை ஒலிப்பதிவு செய்தல்.
5. ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு சுவடிப்படுத்தல்.
6. ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல்.

எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

ஒரு வருட காலப்பகுதிக்குள் காரைநகர் தொடர்பான ஆவணங்களை திரட்டுதல், ஆளுமைகளின் வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் , இங்கு அமைந்துள்ள நிறுவனங்களை ஆவணப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் காரைநகர் - ஊர் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு இச் செயற்றிட்டமானது பூர்த்தி செய்யப்படும்.

எதிர்பார்க்கப்படும் பாதீடு
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு

**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**